**செ.வெ.எண்: 09** **நாள்: 04.11.2016**

**புதுக்கோட்டை மாவட்ட சம்பா நெல் சாகுபடிக்கு 1325 மெ.டன் உரங்கள் வரப்பெற்றுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை புகைவண்டி நிலையத்தில் சம்பா நெல் சாகுபடிக்காக தூத்துக்குடியிலிருந்து சரக்கு பெட்டிகளில் வரப்பெற்ற உரங்களை மாவட்ட உரவிற்பனை மையங்களுக்கு லாரிகள் மூலமாக அனுப்பப்படும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.11.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு நமது மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடிக்கு தேவையான உரங்களை கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்க உத்தரவிட்டதை தொடர்ந்து உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடிக்காக தூத்துக்குடியிலிருந்து சரக்கு பெட்டிகளில் வரப்பெற்ற உரங்களை மாவட்ட உரவிற்பனை மையங்களுக்கு லாரிகள் மூலமாக அனுப்பப்படும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இதில் 823.4 மெ.டன். யூரியா, 246.4 மெ.டன். டி.ஏ.பி , 255.4 மெ.டன். காம்ப்ளக்ஸ் - (20:20:0:13 ) என மொத்தம் 1325.2 மெ.டன் உரங்கள் வரப்பெற்று தற்பொழுது அனுப்பட்டு வருகிறது.

மேலும், நவம்பர் மாதத்திற்கு தேவையான 6842 மெ.டன். யூரியா, 3850 மெ.டன் டை அமோனியம் பாஸ்பேட், 4015 மெ.டன் பொட்டாஷ், 4450 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்களை இருப்பு வைப்பதற்கு வேளாண்மைத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் தரமான உரங்கள் தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு கிடைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விவசாயிகள் மண்பரிசோதனை வாயிலாக மண்வளத்திற்கேற்ப உரமிட்டு, நெல் சாகுபடியில் அனைத்து தொழில்நுட்பங்களையும் முறையாக கடைபிடித்து உச்சவிளைச்சல் அடைந்திட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, உள்ளிட்ட அரசு அலுவலர் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**